## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.9/2022

04.03.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 1 சிலம்பரசன் த/பெ.ஜெயராமன்

வாதி தரப்பில் குறுக்கு் விசாரணை:

என் தாயார் பெயர் பிச்சையம்மாள். என் தாயார் என் தந்தைக்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் தந்தை எந்த தேதியில் காலமானார் என்றால் 28.05.2021 தேதியில் காலமானார். 1ம் பிரதிவாதி என் தந்தையின் தாயார் என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் என் தங்கை மற்றும் தம்பி என்றால் சரிதான். என் தந்தைக்கு வாதியும் நாங்களும் மட்டும் வாரிசுகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 என் தந்தை 14.03.2012 தேதியில் 1ம் பிரதிவாதியிடம் சொத்து கிரையம் வாங்கியதற்கான கிரைய பத்திரம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 முதல் 8 கிரையபத்திரங்கள் என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை பெயரில் கிரையம் பெறப்பட்ட மேற்படி சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் ஆமாம்.

(வாதி தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

PW2/20072024/OP332024

ARUMUGAM MANIMOZHI
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.03.04 17:56:01 +0530

Principal Sessions Judge,

Villupuram.